**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. No.30/2024**

**PW8**

| | | |
|---|---|---|
| Name | : | மரு. கவிபூர்ணிமா |
| Father's Name | : | துரைசாமி |
| Village | : | |
| Taluk/District | : | சேலம் |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.07.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாவட்டம் , ஏற்காடு அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 2022 ல் போளூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன் . அப்போது 04.12.2022 அன்று பணியில் இருந்தபோது மாலை 7 மணிக்கு சுமார் 35 வயதுடைய ஒரு ஆண் நபரை 108 ஆம்புலன்சில் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள் . அவருடன் உறவினர்கள் யாரும் வரவில்லை . ஆம்புலன்சில் பணிபுரிபவர்கள் மட்டும் வந்தார்கள் . அவரின் பெயர் தெரியாததால் அவர் பெயரை விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை . அவர் சுயநினைவின்றி இருந்தார் . மேற்படி நபரை பெரியகரை பால்பண்ணை அருகில் விழுந்து இருந்தவரை கொண்டு வந்ததாக சொன்னார்கள் . அவருக்கு உயிர் இருந்தது. மேற்படி நபருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தது.

1. தாடை எலும்பு உடைந்த நிலையில் இருப்பதாக தெரிந்தது .

2. வாயிலும், முகத்திலும் அதிகமாக ரத்தம் வடிந்திருந்தது.

3. வலது காதுக்கு பின் பகுதியில் ஒரு ரத்தக்கட்டு வீங்கி காணப்பட்டது.

4. அழுத்தி பார்த்ததில் அவரின் கை, கால் அசைவு தெரிந்தது.

அவரை மேல் சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன் . நான் வழங்கிய விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ. 6. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் முள்வேலி கட்டையால் ஒரு நபரை ஓங்கி அடிக்கும்போது இதுபோன்ற காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு . இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆம்புலன்சில் ஓட்டுநர் மற்றும் ஒரு Emergency technician வந்தார். அவரை யார் தாக்கியது என்று யாரும் சொல்லவில்லை. ஒரு நபர் மேடான பகுதியில் இருந்து கீழே குப்புற விழுந்தால் மேற்சொன்ன காயங்கள் ஏற்படும் என்று சொன்னால் சரிதான். வாகன விபத்திலும் இதுபோன்ற காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது . விபத்து பதிவேட்டு நகலில் தாடையில் ஏற்பட்ட காயத்தினாலும் , ரத்தம் மூச்சுக்குழாய்க்குள் சென்று மூச்சு திணறல் இருந்தததாக தான் சொல்லியுள்ளேன் . என்னிடம் காண்பிக்கப்படும் பிரேத பரிசோதனை சான்றிழில் குறிப்பிட்டுள்ள மார்பு , வலதுகை, இடது முன்கை , வலது முன்கை , மண்டை ஓடில் குறிப்பிட்ட காயங்களை நான் விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . அந்த காயங்கள் இல்லாததால் தான் நான் குறிப்பிவில்லை என்று சொன்னால் மேற்படி காயங்கள் நான் பார்த்தபின்பு வெளியே தெரிய ஆரம்பித்திருக்கும் . நான் குறிப்பிட்ட கன்றிய காயங்கள் அளவு அதிகமாக உள்ளதால் நான் சொல்லும் விளக்கம் ஒப்புக்கொள்ளும்படி இல்லை என்று சொன்னால் சரியல்ல . பிரேத பரிசோதனை சான்றிழிலும் ,விபத்து பதிவேட்டு நகலிலும் காயம்பட்ட நபரின் வயது வெவ்வேறாக 10 வயது வித்தியாசமுடன் உள்ளது என்றால் சரிதான் . நான் சரியாக பரிசோதனை செய்யாமல் போலிசார் கேட்டுக்கொண்டவாறு ஒரு விபத்து பதிவேடு நகலை வழங்கினேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.